# மனமே கேளாய்!

ஆடும்வரை ஆடுவதும் ஆலயத்தில் தேடுவதும்
வாடிக்கையானதொரு நிதியோ!
கூடுவோரை விலக்குவதும் விலக்குவோரைத்
தேடுவதும் மாயனவன் செய்த விதியோ!
வாடும்மனம் வாடுவதும் வாடாமலர் தேடுவதும்
காலம் செய்யும் ஒரு கனவோ!
நாடும்மனம் நல்லவரை நலமிழக்கச் செய்வதுவும்
காலம் செய்யும் சதியோ!

வீடும்பொன்னும் வேண்டும்வரைச் சேர்த்தல்தான்
வாழ்வின் ஒரு நிலையோ!
காடுமலை ஏறிவிட்டு, கால்வலிக்க நடந்தபின்பு
தேடுவது சீலனவன் தோளோ!
ஊடும்மனம் ஊடியபின் உண்மையதை தேடுவதும்
அந்த மாயவனின் நிதியோ!
தேடும்மனம் தேடுகையில் தெளிவதனைக் கண்டுவிட்டால்
தேவையில்லை அந்த வலியே!

(விழு.வே-பக்-21) - கவிவளவன் 18-03-2021 (6.45 ஏ.எம்.)

# இன்பம் பெருகுக!

எதனால் எதனை வெல்வோமோ!
அதனால் அதனை அடைவோமோ!
இதனால் இன்பம் பெறுமோமோ!
இனிதாய் வானில் பறப்போமோ?

கனிவாய்ச் சொற்களை ஆளுங்கள்!
கனத்த மனமோ இலகுவாகும்!
மனத்தில் இன்பம் நிலையாகும்!
சினத்தை கொஞ்சம் ஒதுக்குங்கள்!

சிந்தையால் அதனைத் திருத்துங்கள்!
பந்தாய்ச் சுருளும் கோபமதும்,
சிந்தையில் நிறையும் செறிவேதான்!
நிந்தை செய்வோரை ஒதுக்குங்கள்!

நிறைவாய் வாழ்வைக் காணுங்கள்!
அறிவே வாழ்வின் அணிகலனாம்!
அன்பே வாழ்வின் வழியதுவாம்!
இன்பமே மனத்தில் பூ பூக்கும்!

- கவிவளவன்

**19-03-2021** (08.05 AM) (ம.கி.-பக்-5)

# அறிவைச் செய்க!

கனவினைச் சுமந்து காலார நடங்கள்!
மனத்தின் சுமைகள் மரணம் எய்தும்!
மனத்தை ஆளும் மகத்துவம் அறிக!
குணமெனும் குன்றாய் குவலயம் சொல்லும்!

பிணமாய்ப் போகையில் பெருமைகள் தெரியும்!
பணமே வாழ்வின் பக்குவம் இல்லை!
பணமும் தேவை உயிர்நிலைக் காக்க!
தினமும் குமைந்து தெருவில் அலையாதீர்!

கனவின் களங்களை கருத்தாய் செய்க!
மனமும் தானே நன்நிலை எய்தும்!
தனமே வாழ்வின் தகைமை இல்லை!
சினமே அறிவை எழுந்திடச் செய்யும்!

குணமாய்க் கொண்டு அதனை ஆளுங்கள்!
மனமும் அதனால் மடமையை நீக்கும்!
வனம்தரும் மழையே வான்முகில் நிலையாய்!
தனம்தரும் செல்வம் தெள்ளிய அறிவே!

கவிவளவன் - 18-03-2021(7.00 AM.) (விழு.வே-பக்-23)

விற்பனை ஆகுமே நூலென்று வித்திலா,
சொற்புனைப் பாக்களைப் சூடாதீர்—நற்றமிழ்ச்
சொற்பதம் கூட்டிப் பகன்றிட நல்லதோர்க்
கற்பனை வேண்டும் கவிக்கு! (வெண்பா)

# மனமே கேளாய்!

காலம் தானே கனவைச் சுமக்கும்
கண்கள் தாமே வலியைக் காட்டும்
வானம் இடித்தால் மழையது பொழியும்
வலித்த மனமோ கவிதை நெய்யும்!

பழித்த மனமோ பாரம் சுமக்கும்!
கழித்த காலம் காண்போம் என்று?
விழித்தே வாழ்வின் உண்மை தேடுங்கள்!
விரும்பிய கோலம் வருதே இல்லை!

அரும்பிய வாழ்வில் அமைதி காணுங்கள்!
கரும்பின் சுவையை கனிந்து பருகுங்கள்!
இரும்பாம் மனத்தை இளக்கி வையுங்கள்!
அருமையாய் இன்பம் அரங்கம் ஏறும்!

- கவிவளவன் **19-03-2021** (7.45 AM)
(ம.கி.-பக்-4)

## நோக்கம் எதுவோ?

பிறப்பை பற்றி அறிவோமோ!
பிறந்ததன் நோக்கம் அறிவோமோ!
இறப்பும்தான் அறிவோமோ?

இடை நிற்கும் வாழ்வின்,
நடப்பும்தான் அறிவோமோ?
இன்பமும் துன்பமுமாய்,

இன்னலும் தொல்லையுமாய்,
மன்னிய பல நிலைகளுமாய்,
எண்ணியதை அடைந்தோமோ?

ஏனென்று நினைத்தோமோ?
வான்நின்ற இறையென்போம்;
வகுத்ததே வாழ்வென்போம்!

படரும் பலகதையதுவாய்,
தொடரும் வாழ்வை நகர்த்த,
துன்பமாய் பசியதுவோ,

தூண்டியே வழிநடத்தும்!
மாண்டவர் சொல்வாரோ,
மண்வாழ்வின் பயன் தனையே!

மறதியால் துன்பங்கள் நம்
மனம்விட்டுப் போவது போல்,
மறுபடியும் பூ பூக்கும் புதியதாய்,

புதியவருடன் பூமிதன் வழி நடக்கும்!
31-05-2021 (21-55)

## கவிதை!

நெக்குருகி உணர்வுகளை நேரடியாய்,
கொட்டுவதால் பிறக்கும் கவிதை!
தாக்குதலும் போற்றுதலும் தானிந்த
நேரிட்ட சண்டைதனை நிகழ்த்தும்!
தூக்கத்தால் நிறைகின்ற வாழ்க்கையில்,
தொடராய் துன்பங்கள் நிலைப்பதில்லை!
தாக்குதலின் வலியதுவோ நெஞ்சில்தான்
தவறாமல் நாளும் தொடருமன்றோ!

போக்காக வரிகளிலே பொதிந்து,
உவமித்துச் சொல்லி வைத்தால்,
தாக்குதலும் தாக்காது, அந்தத்
தனிமனிதர் தானுணர்ந்து கொள்வார்!
சீக்காகும் கவிதைகளும் உவமையின்றி,
செய்வதினால் அதனழகும் கெடும்!
நோக்கும் வடிவழகை உவமித்து,
வடித்தலே கவிதைக்கு அழகென்பேன்!
18-05-2021 (06-10 AM)

## தேடுவேன் மலரடி!

தேடியென் மனதுள் தேவைகள்;
வளர்ந்திடத் தேவையில்லை!
ஆடியென் மனதுள் ஆசைகள்;
வளர்ந்திடத் தேவையில்லை!
கூடியென் மனதுள் கொள்கைகள்;
சாற்றிட ஆசையில்லை!
பாடியென் மனதுள் பசுமைகள்;
நிறைத்திட வேலையில்லை!

சூடியென் மனதுள் சுகங்களைத்;
தேடிட ஆசையில்லை!
நாடியென் மனதுள் நன்மைகள்;
அன்றியோர் செயலுமில்லை!
ஓடியென் மனதுள் ஒளிந்திடும்;
ஆசைகள் ஏதுமில்லை!
நாடியுன் மலரடி நாளும் தேடிட,
வன்றியோர் ஆசையில்லை!
20-06-2008 (ம.கீ. பக்-15)

## அழகு!

விளையாடும்,
விழிமீன்கள்;
கவிபாட அழைக்கும்!

விளையாடும்;
கரம் குலுங்கிப்
பார்வையதைத்
திருப்பும்!

தளிராகும்;
விரல் முகங்கள்,
இளமையதைக்
கூறும்!

குளிராகும்
தன்மையதால் நிலவு
கூட ஏங்கும்!
---- 1990 ---

## காதலிதுதான்!

**நா**ல்விழி நோக்க நான்மறையின்றி;
சேல்விழி அசைவில் சிக்கெனப் பிடிக்கும்!
பார்வையில் வளரும் பருவச் சுமைகள்;
பாரினில் இணையே இல்லாதாகும்!

‘பா’வகை நூறாய் அரங்கம் ஏறும்!
பீச்சு மணலில் பின்னலை வளைக்க;
இடைவெளி தூரம் இல்லாதாகும்!
இணைந்தே நடக்க மரபுகள் கரையும்!

பேருந்து வரையிலும் பிரியம் வளரும்!
தியேட்டர் கியூவைத் தேடிப் போகும்!
காதல் அரும்பிக் கடிதட இன்பம்;
காணும் வரையில் காதலும் வாழும்!
1990 (ம.கீ-பக்-16)

**<u>ஒரு வெண்பா!</u>**

கற்றறிவு ஆற்றும் கலைகள் எவையுமே,

நற்பெயர் தனையே நல்கிடும் – நற்கலையாய்,

நற்றமிழ்ப் பாக்களை நாட்டியே வாழ்ந்திட,

கற்பனை வேண்டும் கவிக்கு! - **ஆகஸ்ட்1989**